
# பேய்த்தாழை மாவடி மாரியம்மன் ஆலய வரலாறு



வெளியிட்டோர்:
திரு.கதிர்காமத்தம்பி கணேசன் விஜயா
குடும்பத்தினர் (பிரான்ஸ்)
திரு.மயில்வாகனம் இராமச்சந்திரன் ஒலிவியா
குடும்பத்தினர் (இலண்டன்)

நூலாசிரியர்:
கலாபூஷணம் தாழை செல்வநாயகம்

KP 35

# வினை தீர்க்கும் மாவடி மாரியம்மன்



# நூல் பற்றிய விபரங்கள்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **பேய்த்தாழை மாவடி மாரியம்மன் ஆலய வரலாறு** |
| நூலின் தன்மை | : | ஆலய வரலாற்று ஆய்வு |
| வெளியிட்ட வருடம் | : | 2014 ஆகஸ்ட் |
| நூலாசிரியர் | : | கலாபூஷணம் தாழை செல்வநாயம் |
| பக்கங்கள் | : | 40 பக்கங்கள் |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கு |
| கணணி அச்சுக்கோர்ப்பும், வடிவமைப்பும் | : | "*ரிது*" பிரின்டிங், பேத்தாழை. |
| வெளியிடுவோர் | : | திரு.கதிர்காமத்தம்பி கணேஷன் விஜயா குடும்பம் - பிரான்ஸ்<br>திரு.மயில்வாகனம் இராமச்சந்திரன் ஒலிவியா குடும்பம் - லண்டன் |
| விலை | : | |

# சமர்ப்பணம்

இப்பிரதேசத்தின் வரலாற்றினை அழிந்து போகவிடாது எழுதி வைத்திருந்தவரும், அந்நியர் ஆதிக்கம் இங்கு நிலவியபோது பட்டங்கட்டியாக ஆட்சி புரிந்தவர்களின் வரிசையில் வந்த கதிர்காமர் சின்னத்தம்பி ஆறுமுகம் என்பவருக்கும், இவ்வாலயத்தினை முதன் முதலாக உருவகித்து சடங்கு நடத்தியவரான கதிர்காமர் காசுபதி என்னும் நாமத்தினையுடைய சக்கையன் போடிக்கும் அவருடன் இணைந்து பூசை வழிபாடுகளை செய்து வந்த பேயரின் குமாரர்களான கந்தப்பன் மாரிப்போடி, கந்தப்பன் கணபதி(முனைக்கணபதி) ஆகிய நால்வருக்கும் இந்நூலினைச் சமர்ப்பணம் செய்கிறேன்.

(ஆசிரியர்)

விடுதலை,
பேய்த்தாழை,
வாழைச்சேனை.



## விநாயகர் வணக்கம்

பூதலத்தில் யாவர்க்கும் பேரா தரவா எந்நாளும்
மாதரசி என்று வாழ்த்துகின்ற மாவடி மாரியம்மன்
சீதானார் தங்கை சிறப்பான வரலாற்றை
காதலுடனோதக் கணபதியே காப்பாயே



## கலைவாணிக்கு வணக்கம்

தாயே சரஸ்வதியே சங்கரியே முன்னடவாய்
என்தாயே கலைவாணி ஏகவல்லி நாயகியே
வாணி சரஸ்வதியே என்வாக்கில் குடியிருந்து
என்நாவில் குடியிருந்து நாலோசை தாருமம்மா
மகலா சனத்தாளே காரடி பெற்றவளே
மாவடி மாரியம்மன் வரலாற்றை மனதுடனே நான் எழுத
தண்பொதிகை மலைப்பிறந்த தமிழின் தாயே வாருமம்மா



## வாழ்த்துரை

கோயிலும் சுனையும் நிறைவுறப் பெற்ற தமிழர் தம் வாழ்வில் வரலாறுகளும், கோயில்களையும், சுனைகளையம் அண்டியே தோன்றி வளர்ந்து வந்துள்ளன என்பது ஒரு வரலாறு. அவ்வாறே எமது பேய்த்தாழைக் கிராமத்தில் எழுந்தருளி நூற்றாண்டுக்கும் மேலாய் அருள்பாலித்துக்கொண்டிருக்கும் அன்னை மாவடி மாரியம்மனின் தல வரலாற்றினை அதே கிராமத்தைச் சேர்ந்தவரும், கடந்த நாற்பது வருடங்களுக்கும் மேலாக எழுத்துப் பணியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு தொடர்ந்து பல்வேறுபட்ட படைப்புக்களை உருவாக்கித் தந்து கொண்டிருப்பவருமான தாழை செய்வநாயகம் அவர்கள் எழுதியிருப்பது மிகுந்த மகிழ்ச்சிக்குரியது.

உண்மையான ஒரு படைப்பாளி தான் வாழ்ந்த சமூகத்தையும், அதன் விழுமியங்களையும் தனது படைப்புக்களின் உயிர்நாதமாக்கி அதனை தொடர்கின்ற தலைமுறைகளுக்கெல்லாம் கொண்டு சேர்க்கவேண்டியுள்ளது. அந்தப் பொறுப்புமிக்க ஒரு படைப்பாளி எமது ஆலய வரலாற்றினை எழுதியுள்ளமை சிறப்பானது. பேய்த்தாழைக் கிராமத்தின் வரலாறும், மாவடி மாரியம்மன் ஆலயத்தின் வரலாறும் ஒன்றையொன்று பிரிக்க முடியாதவாறு பின்னிப் பிணைந்துள்ளன.

வரலாறு எழுதுகின்ற ஒரு படைப்பாளி மிகுந்த தேடலும், பல சிரமங்களையும் எதிர்கொண்டே அவ்வரலாற்றினை எழுதி முடிக்க நேர்கின்றது. அத்தகைய தேடல் மிக்க படைப்பாளியான தாழை செல்வநாயகம் அவர்கள் நமது ஊரின் வரலாறு, பெருமைகளை நன்கு அறிந்தவர். எனவே, அவரது இந்நூல் சிறப்புற வெளிவர அவருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்,
முன்னாள் முதலமைச்சர்,
கிழக்கு மாகாணசபை உறுப்பினர்,
கிழக்கு மாகாணம்.

## ஆசியுரை

வாழைச்சேனையில் பிறந்து பேய்த்தாழையை வசிப்பிடமாகக் கொண்டவராகிய கலாபூஷணம் தாழை செல்வநாயகம் அவர்களை எனக்கு கால் நூற்றாண்டு காலங்களுக்கு முன்பிருந்தே தெரியவரும். அக்காலத்தில் அவர் தேர்தல் காலங்களில், கருத்தரங்குகளில் அரசியல் மேடைகளில் அழகாகப் பேசுவதை நான் கண்ணுற்றவன். வீரையடிப் பிள்ளையார் ஆலய வளவில் இப்பிரதேசத்தில் உள்ளவர்கள் என்றும் கண்டிராத முறையில் முதன் முதலாக கவிஞர் வாகரைவாணனின் "தமிழ்ப்பாவை" என்னும் கவிதை நூலினை பிரதேசத்தின் முதலாவது நூல் வெளியீட்டு விழாவாக 1980ல் நடத்தியவர் என்கின்ற பெருமையினையும் பெறுகின்றார்.

நாவல், சிறுகதை, நாடகம், கட்டுரை, கூத்து, விமர்சனம் ஆகியவற்றில் வல்லவராயுள்ள அவர் பல நூல்களை வெளியிட்டுள்ளதுடன் இப்பிரதேசத்தில் மூத்த எழுத்தாளராகவும் அதிக அரச விருதுகளையும் பரிசில்களையம் கௌரவங்களையும் பெற்றவராக உள்ளதனையம் யான் அறிவேன்.

திரு.தாழை செல்வநாயகம் அவர்கள் எழுதி வெளியிடும் இந்நூல் போன்று இப்பிரதேசத்தின் அனைத்து ஆலயங்களையும் உள்ளடக்கி "ஆலய வரலாறு" என்னும் பொதுவான நூல் ஒன்றினை வெளியிட வேண்டும் எனவும் அவரது எழுத்துப்பணி சிறக்க நான் வீரையடி விநாயகரை வேண்டி அவருக்கு ஆசிகூறுகின்றேன்.

சிவஸ்ரீ முத்துலிங்கம் சண்முகம் குருக்கள்,
பேத்தாழை வீரையடி விநாயகர் ஆலயம்

## வாழ்த்துரை

திரு. தாழை செல்வநாயகம் அவர்கள் ஈழத்தின் பிரபல்யமான எழுத்தாளர்களில் ஒருவர். அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தின் மூத்த எழுத்தாளர்களின் வரிசையில் இடம்பெறும் ஒருவர்.

கோறளைப்பற்று பிரதேசத்தில் பிரதேச செயலகம் நடத்திவரும் கலாசாரப் பேரவை போட்டி நிகழ்வுகளில் 1978ம் ஆண்டு முதல் நாட்டுப்பாடல், சிறுகதை, நாடகம், கவிதை, கட்டுரை ஆகியவற்றில் முதல் பரிசுகளைப் பெற்றுவரும் ஒருவர்.

இவரது ஐந்து சிறுகதைகள் மாவட்ட முதற் பரிசுகளையும் ஒரு சிறுகதை தேசியமட்ட அகில இலங்கை சிறுகதைப் போட்டியில் முதலாவது சாகித்தியப் பரிசினையும் பெற்றுள்ளது என்பதனை இவ்விடத்தில் குறிப்பிட்டே ஆக வேண்டும். அத்துடன் கொழும்பில் இருந்து வெளிவரும் "ஞானம்" சஞ்சிகை நடாத்திவரும் சிறுகதைப் போட்டியில் இவரது சிறுகதை ஒன்று அகில இலங்கை, உலக நாடுகளிலிருந்து போட்டிக்கு வந்து குவிந்த 260 சிறுகதைகளில் 5ம் இடத்திற்கு தெரிவு செய்யப்பட்டு ஆறுதல் பரிசான பணப்பரிசினையும் பெற்றது. அதேபோன்று இவரது நாடகம் "நோர்வே மோல்டே" அகில உலக நாடகப் போட்டியில் பாராட்டுப் பரிசினையும் பெற்றுள்ளது.

ஈழத்திலிருந்து வெளிவரும் பிரபல்யமான தமிழ்ப் பத்திரிகைகளான வீரகேசரி, தினகரன், தினக்கதிர், தினக்குரல் ஆகியவற்றில் இவரது ஆக்கங்கள் நாற்பது வருட காலங்களாக வெளிவந்து கொண்டிருக்கின்றன.

எமது கோறளைப்பற்று பிரதேசத்தில் பல்துறைக் கலைஞராக விளங்கும் இவர் கலாபூஷணம், ஆளுநர் விருது, சாஹித்திய விருது, கலைஞர் விருதுகள் பலவற்றிற்கும் சொந்தக்காரராவார். இவ்வாலய வரலாறு போன்று இவரது எத்துப்பணி மேலும் தொடர எனது வாழ்த்துக்கள்.

கே.எஸ்.ஆர்.சிவகுமார்,
கலாசார உத்தியோகத்தர்,
கோறளைப்பற்று பிரதேச செயலகம்.



## வாழ்த்துரை

தாழையூர் திரு கலாபூஷணம் தாழை செல்வநாயகம் அவர்கள் பல்வேறுபட்ட இலக்கியப் பணிகள் ஊடாக கலாபூஷண விருது உட்பட பல் அரிய விருதுகளை பெற்வராவார். இவருடைய "வாழைச்சேனையின் வரலாற்று விழுமியங்கள்" வாழைச்சேனை வரலாற்றினை ஆய்வு செய்பவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருப்பது சிறப்புமிக்கது.

ஒரு பொறுப்புமிக்க எழுத்தாளன், தான் வாழ்ந்த காலத்தையும், தனது சமூகத்தையும் தனது எழுத்தில் பதிவு செய்யவேண்டியது காலத்தின் தேவை. வரலாற்றுத்துறை மிகவும் பின்தங்கிப் போயுள்ள நமது சமூகத்தில் இது போன்ற ஆலய வரலாற்று வரவு மகிழ்ச்சியளிக்கின்றது. இது வெறுமனே ஆலயத்தின் வரலாறாக மட்டும் இல்லாது, ஒரு ஆலயத்தை அண்டிய சமூகத்தின், ஒரு ஊரின் வரலாறாக அமைந்துள்ளமை சிறப்புக்குரியது.

திரு தாழை செல்வநாயகம் அவர்கள் தனது காலத்தில் படைப்பிலக்கியங்களோடு மட்டுமல்லாது இதுபோன்ற நல்ல நூல்களையும் தரவேண்டும். கோறளைப்பற்றுப் பிரதேசத்தினை பொறுத்தவரையில் கடந்த 40 ஆண்டுகளாக தொடர்ந்து எழுதிவரும் ஒரேயொரு முக்கியமான படைப்பாளியாக விளங்குகின்ற இவருடைய ஏனைய படைப்பிலக்கியங்களைப் போன்று இந்நூலும் எளிய நடையில், பிரதேச மக்கள் படித்துப் பயனுறும் வண்ணம் எழுதப்பட்டுள்ளது. அத்துடன் ஒரு குறுந்திரைப்படம் எடுத்துள்ளதனையும், போட்டிக்காக குறுந்திரைப்பட எழுத்துப்பிரதி எழுதியுள்ளதனையும் யான் அறிவேன்.

இவர்து எழுத்துப்பணி சிறக்கவும், மென்மேலும் இதுபோன்ற அரிய படைப்புகளை அவரிடமிருந்து எதிர்பார்த்து, இந்நூல் சிறக்க எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

திருமதி.தெ.தினேஸ்<br>
(SLAS)<br>
பிரதேச செயலாளர்,<br>
கோறளைப்பற்று பிரதேச செயலகம்.

## முன்னுரை

“ஆயிரம் பிறைகளைக் கண்டவன் தான் ஒரு முழுமையான எழுத்தாளன். மனிதனாகப் பிறந்த ஒருவன் ஒவ்வொரு மாதமும் ஒரு பிறையினைக் காண்கிறான். ஆயிரம் பிறைகள் என்று கூறுமிடத்து ஒரு வருடத்தில் பன்னிரெண்டு பிறைகள் வருகின்றன. ஆயிரம் பிறைகள் 83 வருடத்தினையும் தாண்டி நான்கு மாதகாலங்கள் கழிந்த பின்புதான் பூர்த்தியாகும். எனவே 83 ¼ வருடங்கள் வாழந்த ஒருவன் தான் ஆயிரம் பிறைகளைக் காண முடியும். ஆனால் எமது கிராமங்களில் 100 வருடங்களுக்கு மேலாகவும் பலர் வாழ்ந்திருக்கின்றனர். 93 வருட காலங்களைத் தாண்டியவர்கள் எமது ஊர்களில் இன்னும் உள்ளனர்.

அந்த வகையில் நான் தற்போது 68 வயதினைத் தாண்டி 816 பிறைகளைத் தான் கண்டுள்ளேன். இன்னும் 17 வருட காலங்களுக்கு வாழ்ந்தால் தான் ஆயிரம் பிறைகளைக் காண முடியும். அதுவரையில் வாழ்ந்தால் தான் தொடர்ந்தும் எனது எழுத்துப் பணி நடந்துகொண்டே இருக்கும். அப்போது தான் பூரண எழுத்தாளனாக முடியும்.

நான் 15 வயதில் நாடகம் நடிக்கத் தொடங்கியவன். தொடர்ந்து 50 வருட காலங்களாக பல்துறைகளிலும் கலைப்பணி செய்த காரணத்தினால் தான் எனக்குப் பல விருதுகள் வந்து சேர்ந்துள்ளன. பலரின் பாராட்டும் கிடைத்துள்ளன. அதேநேரம் சிலர் என்னை ஏசித் தூற்றியும் உள்ளனர். நான் வாழைச்சேனை வரலாற்றினை எழுதி வெளியிட்ட அன்று இரவே எனது வரலாற்று நூலினை வீதிகள் தோறும் கிழித்துப் போட்டு பேத்தாழை பேருந்து நிலையத்தில் அரிந்து குவித்தும் வைத்தனர். அன்றே எனக்குத் தெரிந்துவிட்டது. நான் ஒரு பெயர்பெற்ற எழுத்தாளன்தான் என்ற சங்கதி.

இலங்கையில் பெயர்பெற்ற பல எழுத்தாளர்களுக்கு கூட இந்தக்கதி ஏற்பட்டிருப்பது பலருக்குத் தெரியும். எஸ்.பொ, டொமினிக் ஜீவா போன்ற புகழ்பெற்ற எழுத்தாளர்கள் கூட எனது நிலையை ஏற்கனவே அடைந்திருக்கின்றனர். ஒருவருக்கு மேடையில் பேசிக்கொண்டு நின்றபோது கூழ் முட்டைகளால் சரமாரியாக எறிந்திருக்கின்றனர். ஒருவரின் புத்தகத்தினை அவரிடமே காசு கொடுத்து வாங்கி அவர் முன்னாலேயே கிழித்துப் போட்டுள்ளனர். இவைகள் எவ்வளவு பெரிய கொடுமைகள். எனக்கு நடந்ததும் அதே போன்றதொரு கொடுமைதான். எனினும் நான் பயப்படவில்லை. துணிந்துதான் இந்நூலையும் ஆக்கியுள்ளேன்.

‘பேய்த்தாழை மாவடி மாரியம்மன் வரலாறு’ என்னும் இந்நூலை எழுதுவதற்கு நான் இருவருட காலங்களாக முயன்று வந்தேன்.

நான் எழுதிய வாழைச்சேனை வரலாற்று நூலில் இந்த ஆலயத்தின் நிழற்படத்தினை மாத்திரமே போட்டுள்ளேன். அதன் வரலாற்று விபரங்களை எழுதவில்லை. இளம் தலைமுறையினர் இந்த ஆலயத்தின் நிருவாகிகளாக இருந்தமையினால் தான் அவர்களிடம் நான் எதுவும் கேட்டு அறிய முடியவில்லை. மூத்த தலைமுறையினரைச் சந்தித்து விபரங்களை கேட்டு இந்த ஆலயத்தின் வரலாற்றினை எழுத வேண்டும் என்று விரும்பினேன். அதன்படி இந்நூலை எழுத முடிந்தது.

அதேவேளை நான் சந்தித்த முதியவர்கள் பலர் இந்த ஆலயத்தின் வரலாறு பற்றித் தெரிந்திருந்தும் என்னிடம் கூறுவதற்குப் பயந்த நிலையில் இருந்தனர். சிலர் தனது பெயரைப் போட வேண்டாம் என்று கூறினர். புத்தகத்தில் போடுவதற்கு அவர்களது புகைப்படம் கேட்டேன். எனக்கு ஏசினர். "உண்மையைக் கூறுவதற்கு சாட்சிகள் தேவையில்லை. அமிர்தத்திற்கு இனிப்புப் போடத் தேவையில்லை. பளிங்குக் கல்லுக்கு பளபளப்புத் தேவையில்லை. அழகிக்கு அலங்காரம் பண்ணத் தேவையில்லை" என்று அறிஞர் அண்ணா கூறியிருக்கிறார்.

நான் சந்தித்த ஒருவர் சொன்னார். அவனுக்கு இந்தக் கோவிலைப் பற்றி என்ன தெரியும்? என்று இன்னும் ஒருவர் சொன்னார். அவர் கூறியது சரிதான் என்று ஒருவர் சொன்னார். இந்த ஆலயத்தின் வளவுப் பிரச்சினையில் ஒருவர் துவக்குடன் ஓடிவந்தார். மற்றவர் அவரைக் கட்டிப்பிடித்து துவக்கினை பறித்தெடுத்தார் என்று இன்னும் ஒருவர் சொன்னார். ஒருவர் இந்த ஆலயத்தில் அமைந்துள்ள நாகதம்பிரான் ஆலயத்தின் நாகபாம்புச் சிலையினை உடைத்தெறிந்து விட்டு குரங்கு ஒன்றினைக் கொன்று கோயிலுக்குள்ளேயே தலைகீழாகக் கட்டித் தொங்க விட்டார் என்று இன்னும் ஒருவர் சொன்னார். அவர் குரங்கினைக் கோயிலுக்குள் கட்டித் தூக்கியதன் காரணம் என்னவென்றால் நாகதம்பிரான் கோவில் பொங்கல் மிகவும் ருசியானது. பொங்கும் போது வாசனை மூக்கைத் துளைக்கும். அப்படியான பிரசாதம் கிடைக்கும் என்று காத்திருந்தும் ஒரு பிடியாவது கிடைக்காது போன கோபத்தினால் தான் அவர் குரங்கினைக் கோயிலுக்குள் தூக்கினார் வேறு காரணங்கள் எதுவுமில்லை என்று முற்றுப்புள்ளி வைத்தார்.

நான் அவரிடம் ஏன் அவருக்கு ஒரு பிடிப் பொங்கலாவது கொடுத்திருக்கலாமே? என்று மீண்டும் கேள்வி எழுப்பினேன். "தம்பி! பொங்கியவர் ஒரு சிலருக்கு மாத்திரம் பொங்கலைக் கொடுத்துவிட்டு, பொங்கல் பானையுடன் தலைமறைவாகிவிட்டார்" என்றார். நான் மீண்டும், யார் அந்த பக்திமான்? என்ற கேள்வியினைக் கேட்க அடுக்குப் பண்ணியபோது, அந்த நபர் கதையினைத் திசைதிருப்பிவிட்டார்.

இன்னும் ஒருவர் சொன்னார் இந்தக் கோவில் வேடர்களுக்குத்தான் சொந்தமானது அவர்களது பரம்பரையில் வந்தவர்கள் தான் ஏழாவது தலைமுறையாகவும், இந்தக் கோவில் சடங்கினை வருடா வருடம் செய்து வருகின்றார்கள் என்றார். வாசகர்களே! ஆத்திரப்பட்டு இந்நூலையும் கிழித்துவிடாதீர்கள். தொடர்ந்து இந்நூலைப் படியுங்கள். படித்து முடித்துவிட்டு உங்கள் முடிவைச் செய்யுங்கள்.

இந்நூலினை நான் யதார்த்த பூர்வமாக எழுதுகின்றேன். ஏனெனில் நடந்த வரலாற்றினை மறைத்துவிட்டால் அந்நூல் வரலாறு ஆகாது. அமைதியாகப் படியுங்கள். ஏனெனில் மகாவம்சம், சூளவம்சம் ஆகிய சிங்கள வரலாற்று நூல்களை எழுதிய வரலாற்று ஆசிரியர்கள் விட்ட பிழைகளினால் தமிழர்களின் வரலாற்றினை மூடி மறைத்து எழுதியமைதான் இன்றைய தமிழர்களுக்கு இந்தக்கதி ஏற்பட்டுள்ளது.

எனினும் நான் துணிந்துதான், பலரிடம் கேட்டு அறிந்த விடயங்கள் பலவற்றைத் தொகுத்து இந்நூலை எழுதுகிறேன். பிழை பிடிப்பதில் பலர் ஆகாய அசுர்ர்களாயுள்ளனர் என்பது எனக்குத் தெரியும். அந்த வகையில் இந்நூலில் பிழைகளைக் கண்ணுற்றவர்கள் அல்லது முற்றும் பிழையானது என்று முடிவு செய்பவர்கள் எதையாவது செய்யுங்கள். என்னை ஒன்றும் செய்து விடாதீர்கள்.

பிழைகளைச் சுட்டிக் காட்டுங்கள் உங்களுக்கும் இந்த ஆலயத்தின் வரலாறு தெரிந்திருந்தால் நீங்களும் துணிந்து எழுதுங்கள். ஆனால் இந்நூலில் உள்ள எந்தச் சொல்லும் வரக்கூடாது. நான் இந்நலை எழுதுவதற்கு முன்னர் நீங்கள் எழுதியிருக்கலாம் தானே?

இந்நூலுக்கு ஆசியுரைகள், வாழ்த்துரைகள் வழங்கியவர்களுக்கும், அச்சிட்டவர்களுக்கும், தகவல்களை வழங்கிய பெரியவர்களுக்கும், நிதியுதவி வழங்கிய திரு.க.கணேசன் குடும்பம்(பிரான்ஸ்), திரு.ம.இராமச்சந்திரன் குடும்பம்(லண்டன்) ஆகியோருக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவிபுரிந்த அனைவருக்கும் நன்றிகள் பல. எனது எழுத்துப்பணி தொடர உதவுங்கள் எனக்கேட்டு, முத்தாய்ப்புச் செய்கிறேன்.

நன்றி

கலாபூஷணம் தாழை செல்வநாயகம்,
பேய்த்தாழை,
இலங்கை

## தல வரலாறு

கிழக்கு ஈழத்தின் மட்டக்களப்பு மாநிலத்தின் வடக்காக 32 கி.மீற்றர் தூரத்திலுள்ள வாழைச்சேனைப் பட்டினத்திலிருந்து கல்குடாவுக்குச் செல்லும் பாதையில் 2வது மைல் கல்லிலிருந்து வடக்குப் புறமாக வீரையடிப் பிள்ளையார் ஆலய வீதியால் செல்லுமிடத்து 300 மீற்றர் தூரத்தில் ஆற்றின் கரையோரமாக அமைந்துள்ளது இத்தலம்

மாவடி முத்துமாரியம்மன் ஆலயம்; மான்துறையாறு என்னும் அழகிய தமிழ்ப் பெயருடனிருந்து 'மதுறு ஓயா' என்று அழைக்கப்பெறும் உப்பு நீர் ஆற்றின் கரையோரமாக தாழை மரங்களின் மலர்களிலிருந்து வீசும் மணத்தினையும், ஆற்றின் மேலாக எழுந்து வரும் குளிர் நிறைந்த தென்றல் காற்றினையும் சுவாசித்து சூழவுள்ள கிராமத்து மக்களுக்கு நோய் நொடிகளின்றிக் காப்பாற்றி வரும் தெய்வம்தான் இம் முத்துமாரியம்மன்.

ஏறக்குறைய 150 ஆண்டு காலங்களுக்கு மேலாக பழைமை வாய்ந்த இந்த ஆலயத்தில் ஏழாவது பரம்பரையினைச் சேர்ந்த இளைஞர்களால் இவ்வாலயத்தின் சடங்கு நடாத்தப்பட்டு வருகின்றது. கும்பம் வைத்த நாளிலிருந்து நாட்களுக்கு தினமும் பகல் இரவு என இருவேளைச் சடங்குகள் இந்த ஆலயத்தினை ஆரம்ப காலம் முதல் பரிபாலித்து வந்த பிரதான மூன்று குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு பிரித்துக் கொடுக்கப்பட்டு இறுதி நாளன்று தீர்த்த உற்சவத்துடனும், அன்னதானத்துடனும் முடிவுறும்.

150 வருட காலமாக இந்த ஆலயம் அமைந்துள்ள இடத்தின் முன்னால் தல விருட்சமாக ஒரு பூச்செண்டின் வடிவமைப்பில் நின்று கொண்டிருந்தது ஒரு காட்டு மாமரம். இந்த மரத்தின் பெயராலேயே இந்த அம்மனின் பெயரும் "மாவடி" மாரியம்மன் என்ற பெயரில் அழைக்கப்பட்டு வருகின்றது.

இந்த ஆலயத்தின் அருகாமையில் ஓடிக்கொண்டிருக்கும் உப்பு நீர் ஆறானது வங்கக் கடலில் சங்கமிப்பதற்காக ஓடிச்செல்கின்றது. கிழக்குப் புறமாக உள்ள நீரோடையானது வளைந்து வளைந்து ஓடிச்சென்று இந்த உப்பநீர் ஆற்றில் விழுகின்றது. அந்த நாட்களில் இந்த நீரோடைக் கரையில் இரு மருங்கும் வானுயர வளர்ந்து நின்ற

கமுகை மரங்கள் பூத்துக் காய்த்து பழுத்து குலை குலையாகத் தொங்கிக்கொண்டிருக்கும். அக்காட்சியானது அந்தி வேளையில் தெரியும் செவ்வானம் போல் காட்சியளிக்கும்.

இந்த ஆலயம் அமைந்துள்ள பூமியானது அரச காணியாக இந்ததென்றும் காடாய் கிடந்த இந்த இடத்தை வெட்டித் துப்பரவு செய்து கோயில் கட்டப்பட்டதென்று ஒரு சாராரும், இவ்வாலயம் அமைந்துள்ள பூமி “நீத்தாப்போடி” என்பவருக்குச் சொந்தமானதென்று விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரும், இப்பிரதேசத்தில் பட்டங்கட்டியாக ஆட்சி செய்த கதிர்காமர் பரம்பரையில் வந்தவரும் கிராம சபை உப அக்கிராசனராகவிருந்தவரும் வாழைச்சேனையின் வரலாற்றினை மறைந்து போகவிடாது கையெழுத்துப் பிரதியாக எழுதி வைத்தவருமான பெரியார் சின்னத்தம்பி ஆறுமுகம் என்பவருக்குச் சொந்தமானது எனவும் பல்வேறுபட்ட கருத்துக்கள் கூறப்படுகின்றன.

இப்பிரதேசத்தில் ஆரம்ப காலத்தில் முதன் முதலாக மக்களால் வழிபாடு செய்யப்பட்டு வந்த தெய்வம் கண்ணகி அம்மனாகும். பேய்த்தாழைக் கிராமத்தின் தென்புறமாகவும், வாழைச்சேனைக் கிராமத்தின் கிழக்குப் புறமாகவும் அடர்ந்த காட்டு மாமரச் சோலைகளின் மத்தியில் பல வருட காலங்களுக்கு முன்னர் அம்மன் கணபதியார் அல்லது அக்கினிக் கணபதியார் என்னும் முதியவராலும் அவர் வழிவந்த பரம்பரையினராலும் கண்ணகி வழிபாடு கொக்கட்டிய மரத்தினடியில் காட்டு கம்புகளால் பந்தல் அமைக்கப்பட்டு முறைநிற்றலுடன் ஆரம்பித்து குளிர்த்திச் சடங்குடனும் தீப்பள்ளயத்துடனும் மூன்று நட்கள் நடைபெற்று வந்தது.

1960ஆம் ஆண்டு இக்கண்ணகி அம்மன் ஆலயம் தனியாருக்கு என்று இருந்த நிலைமாறி வாழைச்சேனை, பேய்த்தாழை, நாசிவன்தீவு என்னும் மூன்று ஊர்மக்களினதும் பொதுச்சொத்தாகியது. 1960இல் வாழைச்சேனைப் பிரதேசத்தின் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக இருந்த ஆறுமுகம் எஸ்.பி யின் தலைமையிலும், கிராம அதிகாரியாக இருந்த சுப்பிரமணியம் ஆறுமுகம் அவர்களின் தலைமையிலும் ஊர் மக்கள் ஐந்நூற்றுக்கு மேற்பட்டவர்கள் மூப்பனின் பறையறிவித்தலின் மூலம் அழைக்கப்பட்டு காட்டின் மத்தியில் அமைந்திருந்த கண்ணகி அம்மன் ஆலயத்தின் காட்டு மாமர நிழலில் பிரமாண்டமான பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அக்கூட்டத்தின் போது நீண்ட காலமாக கண்ணகியம்மன் ஆலயத்தினை உருவாக்கியவரும் பூசாரியுமான அக்கினி கணபதியார்,

கயிலர் கந்தையா, கணபதி வைரமுத்து ஆகியோர்களால் இவ்வாறு கூறப்பட்டது. "எங்களுடன் இணைந்திருந்து கண்ணகியம்மன் பூசைகளை வருடாந்தம் செய்துவந்த சக்கையன் போடியார், மாரிப்போடியார், கந்தப்பர் எனப்படும் பட்டங்கட்டியார் ஆகியோர் எங்களுடன் ஏற்பட்ட சிறு மனப்பூசல்கள் காரணமாக பிரிந்து சென்று பேய்த்தாழையில் ஒரு மாரியம்மன் கோவிலை கட்டி விட்டார்கள்" என்று கூறினர்.

கண்ணகியம்மன் ஆலயத்திலிருந்து பிரிந்து வந்த சக்கையன் போடியார் எனப்படும் கதிர்காமர் காசுபதி(சக்கையன் போடியார், பிறப்பு-1865, இறப்பு-1945) என்பவர் நூறு வருட காலங்களுக்கு முன்னர் "சின்னான்தாண்ட பணிவுக்கரை" என்ற ஆற்றின் கரையில் காடாய்க் கிடந்த நிலத்தினை வெட்டித் துப்பரவு செய்து வடக்குப் முகமாக தென்னோலைக் கிடுகுகளால் ஒரு கோவில் அமைத்து வண்ணக்கராகவும் கட்டாடி எனப்படும் முதலாவது தெய்வ ஆட்டக்காரராகவும், 'பேயர்' எனப்பெயர் கொண்ட கந்தப்பன் மாரிப்போடியாரையும் அவரின் சகோதரர் கந்தப்பன் கணபதி எனப்படும் முனைக்கணபதியாரையும் இணைத்து கந்தப்பர் பட்டங்கட்டியாரின் கத்தறையினையும் உதவியாக இணைத்து வருடா வருடம் மாரியம்மனுக்கு வழிபாடு செய்து வந்ததாகவும் வரலாறு உள்ளது.

சக்கையன் போடியார் காலத்திற்கு முன்னர் இரண்டு தலைமுறைகளைச் சேர்ந்தவர்கள் மாவடி மாரியம்மன் ஆலயத்தில் சடங்கு நடத்தி வந்ததாகவும் இவ்வூரின் தற்போதுள்ள முதியவர்கள் சிலர் தெரிவித்துள்ளனர். எனினும் அதற்கான ஆதாரங்கள் எதுவும் இதுவரையில் கிடைக்கவில்லை.

சக்கையன் போடியார் கண்ணகியம்மன் ஆலயத்திலிருந்து பிரிந்து வந்ததும் பேய்த்தாழைக் கிராமத்தில் குடியிருந்த ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஐந்து தென்னங்கிடுகுகள் வீதம் சேகரித்துத்தான் ஆரம்பகாலக் கோயிலை அமைத்ததாகவும் மூதாட்டி ஒருவரால் கூறப்பட்டது. அக்காலத்தில் கறையார் சின்னத்தம்பி என அழைக்கப்பட்ட கந்தப்பர் சின்னத்தம்பி என்பவரே ஓலைக் கிடுகுகளை ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று சேகரித்தார் என்றும் அவரே முதலாவது வண்ணக்கர் என்றும் இரண்டாவது வண்ணக்கராக நாகமுத்து என்பவர் இருந்தார் என்றும் அந்த மூதாட்டியாரால் கூறப்பட்டது. மாரிப்போடியார், முனைக் கணபதியார், கந்தப்பு பட்டங்கட்டியார் ஆகியோர் சக்கையன் போடியாருடன் இணைந்திருந்து சடங்கு செய்ததனையும் அம்மூதாட்டி உறுதிப்படுத்தினார்.

## கோவில் காணி வழக்கு - 317A

மாவடி மாரியம்மன் ஆலயம் இன்றைய நிலையினைவிட தனிப்பட்ட ஒருவரின் அதிகாரச் செயல் மூலமே நிருவகிக்கப்பட்டு வந்திருக்கின்றது. கதிர்காமர் காசுபதி எனப்பட்ட சக்கையன் போடியார் தன்னிச்சையாக தனக்கு ஏற்றாற்போல் இருந்த பேயர் என்பவரான கந்தப்பன் மக்களான கந்தப்பன் மாரி, கந்தப்பன் கணபதி போன்றவர்களையும் தன்னுடன் இணைத்து தனக்கு வயல்வேலை செய்பவர்களையும், சேனைப் பயிர்ச்செய்கை செய்பவர்களுமான கூலியாட்களைக் கொண்டு பெரிதாக இல்லாமல் சிறிய அளவில் கோவில் அமைத்து வடக்கு முகமாக வாசல் வைத்து சடங்கு செய்து வந்ததாக அறிய முடிகிறது.

அந்தக் கோயிலைச் சுற்றிவர ஆதிக் குடிகளான வேடர்களே ஒரு சிறிய அளவில் குடியிருந்தனர். சக்கையன் போடியார் சொல்வதனையே வேத வாக்காகக் கொள்பவர்கள். அக்காலத்தில் தம்பிமுத்து, அப்புக்காத்தர் ஆங்கில ஆட்சியாளர்களிடம் மானியமாக பெற்ற ஐம்பது ஏக்கர் நிலத்தினை இந்தப் பழங்குடி இனத்தவர்களுக்கு வழங்கியிருந்தார். இவர்களாலேயே இந்த இடத்தில் ஆரம்பக் கோவில் அமைக்கப்பட்டு அவர்களாலேயே வணங்கப்பட்டது என்ற செய்தினையும் அறிய முடிகிறது.

சக்கையன் போடியாரின் காலத்தின் பின்னர் அவர் வழிவந்த அவரது மூத்த புத்திரன் காசுபதி கதிர்காமத்தம்பி போடியார் என்பவர் தந்தையின் அடியொற்றி சிறிய அளவிலேயே சடங்கு செய்து வந்தார். இவர் மயிலங்கரச்சையில் தனது தென்னந்தோட்டத்தில் இருந்த கொப்ராப்போடும் போரணையில் வேலை செய்த பேய்த்தாழைக் கிராமத்தைச் சேர்ந்த கூலியாட்களைக் கொண்டு தனது கட்டுப்பாட்டில் வைத்துச் சடங்கு செய்தார்.

கதிர்காமத்தம்பி போடியார் காலத்தில் இந்தக் கோவில் பூமியின் அளவு மூன்று றூட்டாக இருந்தது என்றும்(முக்கால் ஏக்கர்) அந்தப் பூமியினை பட்டங்கட்டியாக இருந்தவர்களின் பரம்பரையில் வந்தவரும் கிராமசபை உப அக்கிராசனாகவிருந்தவருமான சின்னத்தம்பி ஆறுமுகம் என்பவர்தான் வழங்கியிருக்கலாம் என்றும் சக்கையன் போடியாரால் நீத்தாப் போடியாரால் காடுவெட்டி, வெளியாக்கி கோவிலுக்கு உடைமையாக்கப்பட்டது என்றும் மூன்று விதமான கருத்துக்கள் இருந்த போதிலும் இக்கோவில் பூமிக்கான எதுவித ஆதாரங்களும் இருக்கவில்லை.

தனது தமையனான கதிர்காமத்தம்பிப் போடியாரின் காலத்தில் கோவில் பூமிக்குரிய உறுதியினை தான் கண்ணுற்றதாகவும் அதில் மூன்று றூட்(3 Root) என்ற அளவு போடப்பட்டிருந்ததாகவும், சக்கையன் போடியாரின் கடைசிப் புதல்வனான காசுபதி தம்பிராசா என்பவர் கூறினார். காலவரையில் அந்த உறுதியானது அழிக்கப்பட்டு இல்லாது செய்யப்பட்டுவிட்டது என்றும் இதனை யார் செய்திருப்பார்கள் என்றும் தெரியவில்லை என்பதனையும் காசுபதி தம்பிராசா கூறக்கேட்டுள்ளேன். எனினும் தற்போதுள்ள இளைய தலைமுறையினரின் கோவில் தலைவராக இயங்கிவரும் சிவநேசதுரை சுகுந்தன் என்பவர் தெரிவிக்கையில் மாரியம்மன் கோவில் உறுதி புதிதாக எழுதப்பட்டுவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

எது எப்படியிருந்த போதிலும் நாம் கோவில் வழக்குப் பற்றிச் சிறிது ஆராய்வோம். கோவில் வளவின் வடக்குப் பக்கம் உள்ள பூமி சின்னத்தம்பி ஆறுமுகம் என்வருக்குச் சொந்தமானது, கோவிலின் வடக்குப் பக்கமாக பிள்ளையார் கோவில் உள்ளது. ஆறுமுகத்தார், தனது பூமியின் தெற்குப்புற எல்லை வேலியினை பிள்ளையார் கோவில் ஓரமாக அடைக்க எத்தனித்தார். பின்னர் அடைத்தும் விட்டார். கோவில் ஓரமாக வேலி இருந்ததனால் சுவாமி வலம் வருவதில் பிரச்சினையாகவிருந்தது. வேலி தடையாகவிருந்தது. எப்படியும் நான்கு(4) பாகப் பூமியாவது ஆறுமுகத்தார் தனது காணியில் கோவிலுக்காக விட வேண்டும். அப்போது கோவிலில் சடங்கு செய்து நடத்தி வந்தவர் சக்கையன் போடியாரின் வழிவந்த அவரது மகன் கதிர்காமத்தம்பிப் போடியாராவார். ஆறுமுகத்தாரின் இந்தச் செயலானது அவருக்குப் பிடிக்கவில்லை. போடியாருக்குத் துணையிருந்தவர்களும் இதனை எதிர்த்தனர். முக்கியமாக போடியாரின் மனைவியான செல்லம்மாவின் சகோதரர்களான கோணாமலையர் எனப்படும் கந்தையா கதிர்காமத்தம்பி, க.நல்லதம்பி, மாரிப்போடியார், முனைக்கணபதியார் போன்றவர்களும், ஊர் மக்களும் சேர்ந்து கோவில் வேலி விடயத்தில் எதிர்ப்புத் தெரிவித்தனர். அத்துடன் வாய்த்தர்க்கம் இருசாரார் பகுதியிலிருந்தும் அதிகரித்து அடிதடி வரையில் சென்றது. ஆறுமுகத்தார் அந்த வேளையில் ஓடிச்சென்று மீண்டும் துப்பாக்கியுடன் ஓடிவந்தார். அதனைக் கண்ணுற்ற க.நல்லதம்பி என்பவர் அவரைக் கட்டிப்பிடித்து தந்திரமாக அவர் கையிலிருந்த துப்பாக்கியினைப் பறித்து எடுத்தார் என்பது உண்மைச் சம்பவமாகும்.

இந்நிலையில் கதிர்காமத்தம்பிப் போடியாரால் ஆறுமுகத்தார்மேல் மட்டக்களப்பு நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இது 1945 - 1947 ஆண்டு காலப்பகுதியில் இருக்கலாம் என்று

ஆறுமுகத்தாரின் மகன் சிவநேசதுரை என்பவரால் தெரிவிக்கப்பட்டது. பல தவணைகள் வழக்கு நடைபெற்று இறுதியாக நீதிமன்றத் தீர்ப்பானது கீழ்வருமாறு அமைந்திருந்தது.

"அந்தக் கோவில் வளவு வேலியை நான்கு(4) பாகங்களுக்கு அப்பால் தள்ளிப் போடவேண்டும் எனவும் அந்த நான்கு பாகப் பூமிக்குரிய பெறுமதி கோவில் நிருவாகத்தால் வழங்கப்பட வேண்டும்" எனவும் கோவிலுக்குச் சார்பாக தீர்ப்பு வழங்கப்பட்டது. அதன்படி குறித்த வேலி தள்ளிப்போடப்பட்டது. அதன் பெறுமதியினை ஆறுமுத்தார் தேவையில்லை என்றும் கூறிவிட்டார்.

ஆனால், தற்போது ஆறுமுகத்தாரின் அந்த வளவு கோவிலுக்கே உரித்தாகவுள்ளதாகவம் அறிய முடிகிறது. அத்தகைய நல்ல மனம் படைத்த ஆறுமுகத்தார் அக்காலத்தில் சந்தர்ப்பம் சூழ்நிலை காரணமாக நடக்க முடிந்ததாகவும், பலரிடம் தெரிவித்துள்ளார். அத்துடன் அவர் எந்தக் காலத்திலும் அந்தக் கோவில் அமைந்துள்ள பூமியினை தன்னுடையது என்று எவரிடமும் தெரிவிக்கவில்லை என்று தெரியவருகிறது. அத்துடன் வளவுப் பிரச்சினைக்கும் முடிவு காணப்பட்டு தற்போது ஆறுமுகத்தாரின் வழிவந்த மக்கள் பேரப்பிள்ளைகளால் கல்லால் கோவிலும் அமைக்கப்பட்டு சுற்று மதில், மடைப்பள்ளி ஆகியனவும் அமைக்கப்பட்டு, கோவில் காணிக்கு புதிய உறுதிப் பத்திரமும் எழுதப்பட்டு ஆறுமுகத்தாரின் பேரனான சிவநேசதுரை சுகந்தன் என்பவரின் தலைமையில் பேயரின் பரம்பரையில் வந்த முனைக்கணபதியாரின் பேரர்களாலும், மாரிப்போடி, சக்கையன் போடியாரின் வம்சாவழி மக்கள், பேரர்களாலும் சிறந்த முறையில் நிருவகிக்கப்பட்டு சடங்கு நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

## மீண்டும் கோவில் கிழக்கு வாசலாக அமைக்கப்பட்ட விதம்

ஆரம்ப காலத்தில் வடக்கு முகமாக கட்டப்பட்டிருந்த கோவில் கதிர்காமத்தம்பி போடியார் காலத்தில் காட்டு மாமரத்தின் கிளை ஒன்றினை வெட்டி கோவிலை கிழக்கு முகமாக கட்டினர். இந்நிகழ்வு சக்கையன் போடியார் காலத்தில்தான் நடந்தது என்று ஒரு சாரார் கூறினர். எப்படியிருந்தாலும் மரத்தின் கிளை வெட்டப்பட்டு கிழக்கு முகமாக கோவில் அமைக்கப்பட்டு, சடங்கு நடத்தப்பட்டது. ஓலைக்கிடுகுகள் தகரங்களாக மாற்றப்பட்டு கதிர்காமத்தம்பி போடியாரால் கட்டப்பட்டது.

## ஊர் இரண்டுபட்டு புதிய கோவில் கட்டப்பட்டது

கோவில் கிழக்கு முகமாக கட்டப்பட்டதன் காரணமாகவும், அக்காலத்தில் முக்கிய கோவில் பங்காளியாகவும் ஆங்கில ஆட்சியில் பட்டங்கட்டியாக ஊர்க்கடமை புரிந்தவருமாகிய கந்தப்பர் என்படும் பட்டங்கட்டியாரை கதிர்காமத்தம்பிப் போடியார் 'வேடன்' என்று ஏசியதன் காரணமாகவும் (எந்தளவு உண்மை என்று தெரியவில்லை)

அந்த இடத்தில் நின்ற வெள்ளையப் போடியார் வேட்டியை மடித்துக்கட்டிக்கொண்டு காலை மடித்து கதிர்காமத்தம்பி போடியாருக்கு உதைத்ததாகவும் அவர் அசையாது நின்றதாகவும் (இதுவும் எந்தளவு உண்மை எனத் தெரியவில்லை) இப்படிப் பல காரணங்களால் பட்டங்கட்டியாரும், வெள்ளையப் போடியாரும், மலையார் சின்னத்தம்பி ஆகிய ஊரில் மிக்க சண்டித்தனம் கொண்டிருந்தவர்களாயுமிருந்த இவர்கள் இந்தக் கோவிலை விட்டுப் பிரிந்து சென்று தற்போது விஸ்ணு ஆலயம் அமைக்கப்பட்டிருக்கும் இடத்தில் முருங்கைத் தடிகள், கிளிசறியா மரத்தின் கம்புகளாலும் எட்டிக்குப் போட்டியாக சிறிய கோவில் ஒன்றினை அமைத்து வழிபட்டார்கள்.

இந்நிலையில் கோவில் விடயத்தில் ஊரும் இரண்டாகியது. 'சின்னப்பேய்த்தாழை' , 'பெரிய பேய்த்தாழை' என்றாகியது. பெரிய பேத்தாழையின் எல்லை மேற்கே பரியோவான் கிறிஸ்தவ ஆலயம் அருகாக செல்லும் நீரோடையையும், கிழக்கே வீரையடிப் பிள்ளையார் அருகாமையில் உள்ள ஓடையையும் உள்ளடக்கியதாகவும், சின்னப் பேய்த்தாழை என்பது இதன் கிழக்காக பேய்த்தாழை மயானம் வரையில் உள்ள பகுதியாகவும் இருந்தது. பெரிய பேய்த்தாழையில் மகுடியும் டிறாமாவும்(கதகளி) நாடகங்களும், சின்னப் பேய்த்தாழையில் கூத்துக்களும் நடைபெற்று வந்துள்ளமையும் சிறப்பு அம்சங்களாகும். பெரிய பேய்த்தாழையில் வேதப் பள்ளியும், வாழைச்சேனை கொஸ்தாப்பரின் சைவப்பள்ளியும், சின்னப் பேய்த்தாழையில் அப்புக்காத்தரின் அரச பள்ளியும் அக்காலத்தில் இயங்கி வந்தன.

1970ம் ஆண்டு சின்னப் பேய்த்தாழை, பெரிய பேய்த்தாழை எனப் பிரிந்து இரண்டு மாரியம்மன் கோவில்கள் உருவாகி நடைபெற்றபோது, இளைஞர்களாயிருந்த கந்தையா நடேசன், முருகேசு தவராசா(அதிபர்), சா.பஞ்சலிங்கம், கைலாயப்பிள்ளை திருநாவுக்கரசு, கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம், ந.சுப்பிரமணியம், சா.சபாரெத்தினம், க.பொன்னம்பலம், வே.ஜீவராசா போன்றவர்கள் சேர்ந்து இக்கோயில் கூட்டத்திற்கு வந்து

பிரிந்து சென்ற கோயிலை சடங்கு செய்யாமல் நிறுத்தி அவர்களுடன் கதைத்து பல தடவை முயற்சி செய்த பின்னர் இரண்டு கோவில்கள் செய்வது நிறுத்தப்பட்டது. அதன் பின்னர் அந்த இடத்தில் சிறிய இளைஞர்களால் விஷ்ணு கோவில் ஆரம்பிக்கப்பட்டது.

1986ல் அன்னதானம் வழங்குவது நிருவாகத்தால் க.பொன்னம்பலம் என்பவருக்க வழங்கப்பட்டது. அவரது அதிகாரப் பேச்சால் மறுவருடமே அதைப் பொதுவாக நடத்த வேண்டும் என சபையால் தீர்மானிக்கப்பட்டு தொடர்ந்து பொது மக்களாலேயே நடத்தப்பட்டுவருகிறது.

## புதிய மாரியம்மன் கோவிலின் தோற்றம்

கதிர்காமத்தம்பி போடியாருடன் பிரச்சினைப்பட்டு பிரந்து சென்ற வெள்ளையன் போடியாரும் அவரது மகன் சீனியரும் அவர் சகோதரரான வெள்ளையர் ஆறுமுகமும், வைரமுத்து கந்தையாவும், பட்டங்கட்டியார் கந்தப்பரும் அவர் மகன் நாகமுத்து ஆகியோர்கள் ஒன்றித்து தம்பிமுத்தரின் தலைமையில் மேற்கூறப்பட்ட கோவில், தற்போது விஸ்ணு ஆலயம் அமைந்திருக்கும் இடத்தில் அமைக்கப்பட்டது.

இவர்களுக்கு மாரியம்மன் முகக்களை அல்லது சிலை கிடைக்கவில்லை. இந்நிலையில் வெள்ளையரால் தனிப்பட்ட முறையில் வழிபடப்பட்டு வந்த 'சுவாதி அம்மனின்' சிலையை வைத்து மாரியம்மன் என்று கூறி வழிபட்டனர். அந்த அம்மன் அவர்களுக்குப் பேசவில்லை. அப்போது வெள்ளையரின் மகன் சீனியர் தலைவராக இருந்தார். இரண்டு வருடங்கள் மாத்திரம்தான் அந்தக் கோவில் இயங்கி வந்தது. அதன் பின்பு தீப்பிடித்து எரிந்து விட்டது. இந்தப் புதிய கோவிலின் ஆரம்ப காலத்தில் கோவிலின் பெயரில் அம்மனுக்கு அடுக்குச் சாத்தும் சேலைகள், உடுக்கு, வெண்கலப் பாத்திரங்கள், குத்துவிளக்குகள், ஆகியன வந்து குவிந்திருந்தன. "சிறியவர்களால் இந்தக் கோவிலை நடத்த முடியாது என்று கூறி புட்டுவர் கணபதிப்பிள்ளையும், மலையாரின் மகன் உழுவன் சின்னத்தம்பியாரும், மணியாட்டியாரும் ஒன்றாய்ச் சேர்ந்து அந்த இளைஞர்களிடமிருந்து கோவிலைக் கைப்பற்றி சடங்கு செய்து, சிறிது காலத்தின் பின்பு மேற்குறிப்பிட்ட முதிய கூட்டத்தினர் கோவில் சாமான்களையெல்லாம் ஆளுக்கு ஆள் தெரியாது விற்றுத் தின்றுவிட்டு தலைமறைவாகினர்". (மேற்கண்டவாறு பலாரால் கூறப்பட்டது. இது எந்தளவு உண்மையானது என்பது ஊர் மக்களுக்கே தெரியும்.) மாரியம்மனின் சித்தப்படி மீண்டும் மாவடி மாரியம்மன் கோவில் வடக்கு முகமாக பழையபடி அமைக்கப்பட்டது.

அதன்பின் மீண்டும் பிரிந்திருந்த ஊர் ஒன்றுபட்டது. சின்னப் பேய்த்தாழை, பெரிய பேய்த்தாழை என்ற பெயர்கள் மக்கள் மத்தியிலிருந்து மறைந்து விட்டது. புதிய மாரியம்மன் ஆலயம் அமைக்கப்பட்ட இடத்தில் ஆறுமுகத்தாரின் மனைவி பாக்கியத்தினால் அமைக்கப்பட்ட விஸ்ணு ஆலயம் தற்போது சிறப்பான முறையில் நடைபெற்று விருகின்றது என்கின்ற வரலாறும் சம்பந்தப்பட்ட ஒரு முதியவரால் கூறப்பட்டது.

## நிருவாகம் அமைக்கப்பட்ட விதம்

நீண்டகாலமாக - தனிப்பட்டவர்களின் ஆதிக்கத்தின் கீழும், நிருவாகத்தின் கீழும் சடங்கு செய்யப்பட்டு வந்த மாவடி மாரியம்மன் ஆலயத்தின் முதல் நிருவாகமானது 1960ஆம் ஆண்டளவில் மேற்கூறப்பட்ட சடங்கு செய்த பரம்பரையில் வந்தவர்களிலிருந்தே பரவலாகத் தெரிவு செய்யப்பட்டது.

அதன்படி மாரிப்போடியாரின் மகனாகிய மா.சின்னத்தம்பி என்பார் தலைவராகவும் சக்கையன் போடியாரின் கடைசி மகனாகிய கா.தம்பிராசா என்பவரை உப தலைவராகவும் நாகமுத்து என்பவர் கங்காணியாகவும் முனைக்கணபதியர் மு.மயில்வாகனம், இ.நல்லையா ஆகியோர் நிருவாகிகளாகவும் செயல்பட்டு சடங்கு நடத்தினர்.

அதன்பின் மறு வருடத்தில் முதல் நிருவாகத்தில் திருப்தியில்லாது இருந்தமையால் 2வது நிருவாகம் தெரிவு செய்யப்பட்டது. இதில் இ.நல்லையா தலைவராகவும், க.நல்லதம்பி செயலாளராகவும் ஏனையவர்கள் உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டு சடங்கு நடத்தினர்.

அக்காலகட்டத்தில் புணாணைப் பகுதியல் சேனை வெட்டியிருந்த சேனைக்காரர்களிடமிருந்து வாழைக்குலைகளும் அன்னதானத்திற்கு தேவையான மரக்கறிகளும் மாட்டு வண்டிகளில் வந்து குவிந்தவண்ணமிருந்தன. மலையார் சின்னத்தம்பி என்பவரும், பத்தினி அம்மாவும் வாழைக்காய், வத்தாளைக்கிழங்கு, நெய் போத்தால், தயிர் ஆகியவற்றினைக் கொண்டு வந்தனர். முனைக்கணபதியாரின் முனைத் தோட்டத்திலிருந்து பாணக்கத்திற்கான இளநீர்கள் வண்டில் வண்டிலகளாக கொண்டு வந்து குவிக்கப்பட்டன. அக்கால கட்டத்தில் க.நல்லதம்பி அவர்களின் ஆலயப் பணிகள் சம்பந்தமான பங்களிப்பு அதிகமாயிருந்தது.

முனைக்கணபதியார் கோவில் கதவு திறப்பதற்கு மூன்று நாட்களின் முன்னரேயே கோவிலடிக்கு வந்து கோவிலைக் கூட்டி துப்புரவு செய்வார் என்ற சங்கதிகள் கா.தம்பிராசா அவர்களால் கூறப்பட்டது.

## கந்தசாமிப் போடியாரின் காலம் (1963-1965)

தனது தந்தையரான கதிர்காமத்தம்பிப் போடியார் காலமானதன் பின்னர் 1963 தொடக்கம் 1965ம் ஆண்டு காலம் வரையில் தனது தந்தையாரின் அடியை ஒற்றி நிருவாகப் பணியினை மாரியம்மன் ஆலயத்தில் நடத்தி வந்தபோது 1965இல் அகால மரணமானார். அவரது காலத்தில் இ.நல்லையா, க.கந்தையா, ஆ.கந்தையா, ஆ.சிவநாயகம், மு.மயில்வாகனம் போன்றவர்கள் நிருவாகத்திலிருந்து திறம்பட இயங்கினார்கள். க.கந்தையா என்பவர் சடங்கு நடைபெறும் காலங்களில் பால் கொண்டு வந்து பனங்கட்டியுடன் தானே முன்னின்று அனைவருக்கும் வழங்குவார் என்றும், கா.தம்பிராசா தெரிவித்தார்.

## திரு.மா.இராசையா ஆசிரியரின் காலம் (1965 -1970)

இவ்வாசிரியர் சக்கையன் போடியாரின் வழியிலும் ஆரையம்பதியில் கலைப் பரம்பரையினைச் சேர்ந்த அமரர்.த.நல்லலிங்கம் ஆசிரியர் அவர்களின் குடும்பத்தினையும் சேர்ந்தவராவார். ஆரையம்பதியினைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் 1953ஆம் ஆண்டு காலங்களுக்குப் பின்னர் கதிர்காமத்தம்பி போடியாரின் மூத்த மகளான மாரிமுத்து என்பவரை மணமுத்து வாழைச்சேனை அரசினர் சிரேஸ்ட பாடசாலையில் நீண்ட காலங்கள் ஆசிரியராகவும் பணியாற்றி பின்பு பேத்தாழை விபுலானந்த வித்தியாலயத்தில் அதிபர் தரத்திலும் பணியாற்றி பல நல்மாணாக்கர்களை உருவாக்கி கல்விச்சேவை செய்து ஓய்வுபெற்ற பெரியாராவார்.

இவ்வாசிரியர் பழங்குடி மக்களினதும், வாழைச்சேனையைச் சார்ந்த பேய்த்தாழைக் கிராமத்தின் எல்லையில் வாழந்த மக்களினதும் வேண்டுதல் வற்புறுத்தலுக்கமைய இருசார்பு மக்களையும் மாவடி மாரியம்மன் ஆலய முன்றிலுக்கு வரவழைத்து அவர்களுடன் அசையும், அசையா சொத்துக்கள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட பரம்பரைக்கு இருக்கக்கூடாது என்றும், அவை கிராம மக்களின் சொத்தாகவே இருக்க வேண்டும் என்றும் எடுத்துக் கூறியதுடன் நல்ல நிருவாகம் ஒன்றினை அமைத்து திறம்பட நடத்தி வந்தார்.

இவர் காலத்தில்தான் முதன்முதலாக கோயிலுக்கு ஒலி, ஒளி வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டு சிறப்பாக சடங்கு நடாத்தப்பட்டு வந்தது. ஆரையம்பதியிலிருந்து 'சுந்தரம்ஸ் குழுவினர்' ஒலி, ஒளி அமைப்பாளர்கள் இங்கு வரவழைக்கப்பட்டனர்.

திரு.மா.இராசையா ஆசிரியரின் நிருவாகசபையில் பின்வருவோர் நிருவாகிகளாக இருந்தனர்

1. மாரியர் சின்னத்தம்பி(தலைவர்)
2. இ.நல்லையா(செயலாளர்)
3. மா.இராசையா(பொருளாளர்)
4. சீ.பொன்னம்பலம்
5. ஆ.சிவநாயகம்
6. இ.முருகுப்பிள்ளை
7. மு.மயில்வாகனம்
8. திருமதி.செல்லம்மா கதிர்காமத்தம்பி
9. கண்ணன் கந்தையா
10. ஆ.கந்தையா

ஆகியோர் நிருவாகசபை உறுப்பினர்களாக இருந்தனர்.

## பூசைகள்(சடங்கு) பிரிக்கப்பட்ட விதம்

பூசைகள் கௌரவ அங்கத்தவர்கள் தங்கள் சார்பாகவே செய்யப்பட்ட வேண்டும் என்றும், கடைசி நாள் சடங்கிற்கு மட்டும் ஊரவர்களிடமிருந்து வரி அறவிட வேண்டும் என்றும் சிறப்பாக நிருவாக சபையினர் ஒவ்வொருவரும் தலா 1 மரைக்கால் அரிசி, 1 போத்தல் உருக்கெண்ணெய் கொடுக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அம்மனின் கதவு திறந்து மூடும் வரையில் பரம்பரை பரம்பரையாக முக்கிய தொண்டாற்றிய கதிர்காமத்தம்பி போடியாரின் மனைவி, மக்கள்மார் தொடர்ந்தும் உரிமைகள் மாறுபடாமல் இருந்து வேண்டியளவு சேவைகள் செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. கன்னிமார் பாதுகாப்பு அவர்களுக்கான உணவு, அவர்களை பூசைக்கு அழைத்துச் செல்வது ஆகியவற்றுடன் அம்மனின் முகக்களை பூசை உபகரணங்கள், அடையாளச் சாமான்கள் அடங்கிய பெட்டகம் கதிர்காமத்தம்பிப் போடியாரின் மகள் மாரிமுத்துவின் வீட்டிலேயே என்றும் இருக்க வேண்டும் என்றும் தீர்மானித்து கடைப்பிடித்து வந்தனர்.

1970ஆம் ஆண்டு காலத்தின் பின்னர் பல நிருவாக சபைகள் இவ்வாலயத்தில் இயங்கி வந்தன. அதில் முக்கியமான தலைமைப் பதவி வகித்தவர்கள் சிறப்பான வகையில் கோவில் சடங்குகளை திறம்பட நடத்தி வந்தனர்.

## நிருவாகசபைத் தலைவர்களாக இருந்தவர்கள்

1960ஆம் ஆண்டு தொடக்கந்தான் நிருவாகம் அமைக்கப்பட்டு கோவில் சடங்குகள் நடாத்தப்பட்டன. எனினும் இருந்த நிருவாக சபையினர் ஒழுங்கான முறையில் கூட்டறிக்கை, நிதி அறிக்கை ஆகியவற்றை எழுதிப் பேணிவரவில்லை என் அறிய முடிகிறது. என் கரம் கிடைத்தவற்றைக் கொண்டு சில தகவல்களை தருகிறேன்.

1. மா.சின்னத்தம்பி (1960)
2. இ.நல்லையா (1961 - 1962)
3. க.கந்தசாமி (1963 - 1965)
4. மா.சின்னத்தம்பி (1965 - 1970)
5. ஆ.சிவநேசதுரை (1973 - 1979)
6. சி.குமாரசாமி (1990)
7. சா.பஞ்சலிங்கம் (1992 - 1995)
8. ஆ.கந்தையா (1995 - 1996)
9. சு.கணேசன் (1997)
10. ந.பூபாலரெத்தினம்
11. சா.பஞ்சலிங்கம் (1998 - 2001)
12. சு.கணேசன் (2002)
13. க.மகேசன் (2008)
14. சி.சுகுந்தன் (2009 - 2012)
    (2013, 2014 மாற்றமில்லை)

சில கூட்டறிக்கைள் இல்லாத காரணத்தால் ஒழுங்கு முறையாக எழுதப்படவில்லை.

இவர்களுள் பல வருட காலங்களாக தலைவராயிருந்த சா.பஞ்சலிங்கம் அவர்கள் கதிர்காமத்தம்பி போடியாரின் கடைசிப் புத்திரியை மணம் முடித்து இக்கோவிலுக்காக சிறந்த சேவையினை செய்து வந்ததுடன் அதிகமான நிதி உதவிகளையும் வழங்கிய ஒருவராவார்.

அதன் பின்னர் ஆறுமுகத்தாரின் மகன் சிவநேசதுரையின் மகனும் தற்போது கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சர் பதவியினை வகித்து வருபவருமான திரு.சி.சந்திரகாந்தன், மாகாணசபை உறுப்பினரான திரு.நா.திரவியம்(ஜெயம்) ஆகியோர் தற்போது இவ்வாலயத்தின் வளர்ச்சிக்காக புதிய கோவில், புதிய மடைப்பள்ளி, சுற்று மதில்கள் ஆகியவற்றை அமைத்துக் கொடுத்துள்ளதுடன் தற்போது கிழக்கு

மாகாண முதலமைச்சரின் சகோதரரான சி.சுகுந்தன் அவர்களின் தலைமையிலேயே இந்த ஆலயத்தின் நிருவாகம் பல வருடங்களாக சிறப்பாக இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போதுள்ள நிருவாகசபை உறுப்பினர்களின் விபரம்:

1. தலைவர் - சி.சுகுந்தன்
2. உப தலைவர் - சி.பிரபாகரன்
3. செயலாளர் - கு.யசோதரன்
4. உப செயலாளர் - வ.ஜெயநாதன்
5. பொருளாளர் - க.சுந்தரலிங்கம்
6. நிருவாக உறுப்பினர்கள் - 15 பேர்

## இதுவரை பூசாரியாக கடமை புரிந்தவர்களின் விபரம்

1. முருகப்பர் - முறக்கொட்டாஞ்சேனை
2. இளையதம்பி
3. வைரமுத்து
4. முத்துப்பூசாரி - ( 2 வருட காலம்)
5. குழந்தைவேல் - (கூழாட்டி)
6. குந்தைவேலின் சகோதரர்கள்
7. அரசன் பூசாரி - (கூழாட்டி பூசாரியுடன் சிறு வயது முதலே உதவியாக இருந்து வந்துள்ளார்)
8. பொட்டு வீரன் - (காளி வீரக்குட்டி)
9. வீரக்குட்டி வெற்றிவேல் - (வெற்றிப்பூசாரி)
10. கண்ணன் பூசாரி - (சந்திரசேகரன் சந்திரஹாசன், உதவிப் பூசாரி(விநாயகபுரம்)

## இதுவரை தெய்வம் ஆடியவர்களின் வரலாறு

சக்கையன் போடியார் காலத்தில் கொடிமரம் நட்டு, கொடிகளைக் கட்டி காடுகளில் வெட்டிவரப்பட்ட கம்பு, தடிகளை தோணிகள் மூலம் நாசிவன்தீவிலிருந்து ஆற்றினூடாக கொண்டுவந்து பந்தல்கள் போடப்பட்டு பதினாறு(16) வேடத் தெய்வங்கள் ஆடப்படும். அதன்பின்னர் சக்கையன் போடியார் மாரியம்மனுக்கு ஆடுவார். அவர் ஆடி முடிந்த பின்னரேயே ஏனைய தெய்வங்கள் ஆடப்படும். அந்த வரிசையிலேயே வந்த தெய்வமாடுபவர்கள் விபரம்:

1. சக்கையன் போடியார்
2. கந்தப்பு பட்டங்கட்டியார்
3. க.நாகமுத்து - ஜேமிஸ் கணபதி
4. காளி வீரக்குட்டி
5. மணியாட்டியர்
6. வீ.குமாரசாமி
7. க.இரத்தினம்
8. வேலன் சீனி
9. சித்திரவேல்
10. அழகுதுரை
11. வீ.கந்தையா
12. ந.இரத்தினம் (சபாரெத்தினம்)
13. தம்பியப்பா
14. சங்கரன்
15. அக்கினி கணபதியார்
16. வீரபத்திரர்
17. தம்பிமுத்து மாமா
18. வைரமுத்தர்
19. தம்பிப்பிள்ளை

இவர்களுள் சித்திரவேல் அவர்கள் திரு.சா.சஞ்சலிங்கம் அவர்கள் தலைவராயிருந்த காலத்தில் நாககன்னிக்கு ஆடியபோது அதே இடத்தில் விழுந்து அகால மரணமடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**இந்த ஆலயத்திலும், ஊரிலும் இதுவரையில் நடந்த அதிசயங்களும், உண்மைச் சம்பவங்களும்**

**01. கோவிலில் பிழை விடுபவர்களுக்கு வழங்கப்படும் தண்டனை:**

முதன்முதலில் மடைப்பள்ளி ஆற்றங்கரைப் பக்கமாக அமைக்கப்பட்டிருந்தது. ஆலயத்தில் பிழை செய்தவர்கள் யாராயிருந்தாலும் கதிர்காமத்தம்பி போடியாரால் தண்டிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு கும்பம் சொரிந்து வந்ததும், மடைப்பள்ளிக்குள் பெரிய வாழை இலைபோட்டு அதில் நிறையச் சோறு, தயிர், கூழ், பழங்கள் படைக்கப்பட்டு முழுவதனையும் சாப்பிடச் சொல்லும் தண்டனை இருந்தது.

**02. பேயைப் பிடித்து வீட்டு வேலைகளைச் செய்யச் சொன்னவர்:**

கந்தப்பன் என்பவருக்கு 'பேயர்' என்று பெயர்வரக் காரணமாயிருந்த சம்பவம் இது. பேயர் எனப்படும் கந்தப்பனின் மக்கள்தான் மாரிப் போடியாரும், முனைக் கணபதியாரும். கந்தப்பன் ஒரு நாள், பேய் ஒன்றினைப் பிடித்து அதனை வைத்து வேலை வாங்க வேண்டும் என்று நினைத்தார். அதன்படி நடந்துவிட்டது. தன் முன்னால் வந்த பேய் ஒன்றின் தலைமயிரைப் பிடித்து தரதரவென்று இழுத்துச் சென்று அதன் தலையில் ஆணியொன்றை அடித்து அதனை அடக்கிவிட்டு தனது மனைவியிடம் கொண்டு போய் இவனை நமது வீட்டில் வைத்து வேலை வாங்கு" என்று கூறிவிட்டுப் போய்விட்டாராம்.

கந்தப்பரின் மனைவி எந்த நாளும் அந்தப் பேயிடம் ஒரு அவணம் (3 சாக்கு அல்லது முப்பது மரைக்கால்) நெல்லினையும், உரல் உலக்கையையும் கொடுத்து குத்திமுடி என்று கூறுவாராம். பேயும் தினமும் சற்றுநேரத்தில் ஒரு அவணம் நெல்லினையும் குத்தி முடித்து விடுமாம். இதனால் சந்தேசம் கொண்ட கந்தப்பரின் மனைவி நமது வீட்டு வேலையாளாயுள்ளது பேய்தான் என்று முடிவெடுத்து உலக்கையால் அடித்து துரத்தியதாக கதையுள்ளது.

அதனால்தான் கந்தப்பருக்கு 'பேயர்' என்றும் மாரிப்போடியாரையும், முனைக்கணபதியாரையும் பேயரின் மக்கள் என்றும் கூறப்பட்டதாகவும் தெரிகின்றது.

### 03. துப்பல் சிரட்டை கண்டிபிடிக்கப்பட்ட விதம்

வைரமுத்துப் பூசாரியார் மாரியம்மன் பூசைகளைச் செய்த காலத்தில் அடிக்கடி வெற்றிலை போடுவது வழக்கமாகும். உள்ளே நின்று பூசை செய்யும்போது வெளியே வந்து துப்புவதற்கு கஷ்டமாயிருந்ததால் ஒரு சிரட்டை ஒன்றை வைத்துத் துப்புவாராம். ஒரு நாள் துப்பல் சிரட்டையினை வெளியே கொண்டு வந்து கொட்டுவதற்கு மறந்து போய் அம்மனின் அடுக்குச் சாத்திய சேலைகளுக்குள் சொருகிவிட்டு மறந்து விட்டாராம். அப்போது மடப்பள்ளி வேலைக்களைக் கவனித்து வந்த நாகமுத்து நல்லதம்பி என்பவர்(இவரது பட்டப்பெயர் வெடியர்) நினையாப் பிரகாரமாக அலுவலில் கோவிலின் உள்ளே நுழைந்தபோது அடுக்குச் சாத்திய சேலைகள் உயர்ந்திருப்பதனை அவதானித்து அங்கிருந்த துப்பல் சிரட்டையை வெளியே எடுத்து வந்து கதிர்காமத்தம்பி போடியாரிடம் காட்டினாராம். ஆத்திரம் கொண்ட போடியார் பூசாரி வைரமுத்தரை உடனே கோவிலைத் திரும்பிப் பார்க்காது ஓட்டங்காட்டி விட்டாராம். (நா.நல்லதம்பி என்பவர் 19 வருட காலமாக மடப்பள்ளி வேலைகள் செய்தவராம்)

### 04. போடியாருக்குப் பக்கத்தில் தினமும் படுக்கும் நாகபாம்பு

கதிர்காமத்தம்பிப் போடியார் கோவிலடியில் உள்ள மரத்தின் கீழ் தினமும் தலையின் கீழ் கையை வைத்துக்கொண்டு படுத்துக்கிடந்து ஓய்வு எடுப்பாராம். அவருடைய கமுக்கட்டுக்குள் கோவில் நாகம் வந்து அவருடன் படுக்குமாம். போடியார் "என்ன நீ.. உன்கு படுக்க வேற இடமில்லையா? உண்ட இடத்துக்கு போ ..." என்று உறுக்குவாராம். உடனே நாகம் கோவிலுக்குள் சென்று விடுமாம் என்று நாகமுத்து நல்லதம்பி தெரிவித்தார். நாகமுத்தர் கோவில் வண்ணக்கரா -யிருந்தவராம்.

### 05. நாகதம்பிரான் கோவில்

'கடக்காறி' என்று பெயர் கொண்ட பார்வதிப்பிள்ளை (முத்தையாப் பரிசாரியாரின் முதல் மனைவி) சுகவீனமான நிலையில் மாரியம்மன் கோவிலடிக்கு வந்தபோது சக்கையன் போடியார் தெய்வமாடி இந்த இடத்தில் நாகதம்பிரான் ஆலயம் கட்டினால் உனது நோய் குணமாகும் என்று கட்டுச் சொன்னாராம். நோயும் குணமாக நாகதம்பிரான் ஆலயத்தினையும் கட்டினாராம். நாகதம்பிரான் ஆலயத்தினைக் கட்டிய மேசிலார் தாமோதரம் பிள்ளையாவார்.

## ஆலயத்தில் ஏற்பட்ட புதிய திருப்பங்கள்

- க.நல்லரெத்தினம் என்பவர் 1886ம் ஆண்டு காலத்தில் தலைவராக வந்தபோது தனிநபரால் அன்னதானம் வழங்கும் நடைமுறையை மாற்றி பொதுப்பட ஆலயத்தால் வழங்குவதற்கு முயற்சி எடுத்தார்.
- சி.குமாரசாமி தலைவராகவும் க.கதிர்காமநாதன் செயலாளராகவும், சி.ஜெபாலன் பொருளாளராகவும் இருந்த 1993ம் ஆண்டு காலப்பகுதியில் மாரியம்மனுடைய 'எழுந்தருளி' ஆலயத்தில் நிரந்தரமாக வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. பாதுகாப்புக்காக சா.பாலச்சந்திரன் அவர்களால் இரும்புக்கதவு போடப்பட்டது.
- 1973 - 1980 வரை அ.சிவநேசதுரை தலைவராக இருந்தபோது கிழக்கு முகமாக இருந்த கோவில் வடக்கு முகமாக கட்டப்பட்டது. 1979இல் மூலஸ்தானம் பிளேட் போட்டு கட்டப்பட்டது.
- 2006ல் ந.பூபாலரெத்தினம் தலைவராக இருந்த காலத்தில் 'கன்னிமார்மடம்' உடனடியாக சி.சுகுந்தன், சு.கணேசன், சி.அகிலகுமார், சா.பாலச்சந்திரன், தெ.ரேனுதாசன், செ.ரவிக்குமார் ஆகியோர்களால் அமைக்கப்பட்டு கன்னிமார் பிள்ளைகள் தனிப்பட்டவர்களின் வீடுகளில் இருக்கக்கூடாது எனத் தீர்மானிக்கப்பட்டு கன்னிமார்கள் ஆலயத்திற்கு மாற்றப்பட்டனர்.
- மாவடி மாரியம்மன் ஆலய ஆரம்பகர்த்தாக்களாக 'சக்கையன் போடியார் கத்தறை' என எழுதக்கூடாதெனவும் வேடர்களான ஆதிக்குடிகள்தான் முதன் முதலில் அம்மனின் வணக்கத்தை இந்த இடத்தில் ஏற்படுத்தினர் என்றவாறு ஆலய வரலாறு எழுதப்பட வேண்டும் எனவும் இறுதி நிருவாகத்தால் கூறப்பட்டது.(2012)

குறிப்பு:- இவ்வரலாற்று நூலை முற்றாக வாசித்து முடித்தவர்கள் நூலின் கண்ணுற்ற குறை, நிறைகளைச் சுட்டிக்காட்டினால் எதிர்காலத்தில் மீண்டும் திருத்திய பதிப்பாக வெளியிட உதவியாக இருக்கும்.
- ஆசிரியர் -

## ஆண்டு ரீதியாக ஆலய நிருவாகிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1996 | - | அ.கந்தையா | - | தலைவர் |
| 1997 | - | சு.கணேசன் | - | தலைவர் |
| | | எஸ்.குணரெத்தினம் | - | செலயாளர் |
| | | சா.பஞ்சலிங்கம் | - | பொருளாளர் |
| 1998 | - | சா.பஞ்சலிங்கம் | - | தலைவர் |
| | | எஸ்.யோகேந்திரன் | - | செலயாளர் |
| | | எஸ்.ஈவெரா | - | உப செயலாளர் |
| | | க.சுந்தரலிங்கம் | - | பொருளாளர் |
| 1999 | - | சா.பஞ்சலிங்கம் | - | தலைவர் |
| | | எஸ்.யோகேந்திரன் | - | செலயாளர் |
| | | க.சுந்தரலிங்கம் | - | பொருளாளர் |
| 2000 | - | சா.பஞ்சலிங்கம் | - | தலைவர் |
| | | எஸ்.யோகேந்திரன் | - | செலயாளர் |
| | | க.சுந்தரலிங்கம் | - | பொருளாளர் |
| 2001 | - | சா.பஞ்சலிங்கம் | - | தலைவர் |
| | | எஸ்.யோகேந்திரன் | - | செலயாளர் |
| | | க.சுந்தரலிங்கம் | - | பொருளாளர் |
| 2002 | - | ச.கணேசன் | - | தலைவர் |
| | | வே.ஜீவராஜா | - | செலயாளர் |
| | | க.சுந்தரலிங்கம் | - | பொருளாளர் |
| 2003 | - | ச.கணேசன் | - | தலைவர் |
| | | ம.கோகுலராஜ் | - | செலயாளர் |
| | | க.சுந்தரலிங்கம் | - | பொருளாளர் |
| 2004 | - | ச.கணேசன் | - | தலைவர் |
| | | ம.கோகுலராஜ் | - | செலயாளர் |
| | | க.சுந்தரலிங்கம் | - | பொருளாளர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2005 | - | ந.பூபாலரெத்தினம் | - | தலைவர் |
| | | க.சாந்தலிங்கம் | - | செலயாளர் |
| | | க.கிருஷ்ணமூர்த்தி | - | பொருளாளர் |
| 2006 | - | ந.பூபாலரெத்தினம் | - | தலைவர் |
| | | ம.பிரகாஷ் | - | செலயாளர் |
| | | க.கிருஷ்ணமூர்த்தி | - | பொருளாளர் |
| 2007 | - | க.நல்லரெத்தினம் | - | தலைவர் |
| | | த.சாந்தரூபன் | - | செலயாளர் |
| | | க.கிருஷ்ணமூர்த்தி | - | பொருளாளர் |
| 2008 | - | க.மகேசன் | - | தலைவர் |
| | | சி.சுகுந்தன் | - | உப தலைவர் |
| | | ந.விஜிதரன் | - | செலயாளர் |
| | | ப.தவேந்திரராஜா | - | பொருளாளர் |
| 2009 | - | சி.சுகுந்தன் | - | தலைவர் |
| | | ந.விஜிதரன் | - | செலயாளர் |
| | | ம.பிரகாஷ் | - | பொருளாளர் |
| 2010 | - | சி.சுகுந்தன் | - | தலைவர் |
| | | ந.விஜிதரன் | - | செலயாளர் |
| | | ம.பிரகாஷ் | - | பொருளாளர் |
| 2011 | - | சி.சுகுந்தன் | - | தலைவர் |
| | | ந.விஜிதரன் | - | செலயாளர் |
| | | வ.தேவதாஸ் | - | பொருளாளர் |
| 2012 | - | சி.சுகுந்தன் | - | தலைவர் |
| | | சி.பிரபாகரன் | - | உப தலைவர் |
| | | செயலாளர் | - | செலயாளர் |
| | | வ.ஜெயநாதன் | - | உப செயலாளர் |
| | | க.சுந்தரலிங்கம் | - | பொருளாளர் |

## ஆகக்கூடிய நிதி வழங்கியவர்கள்

- கிழக்கு மாகாணசபை - 250000/-
- நா.திரவியம்(ஜெயம்) - 50000/-
- மார்க்கன் - 50000/-

## மாவடி மாரியம்மன் ஆலய வரலாற்று நூலை எழுதுவதற்கு எனக்கு உறுதுணையாக இருந்தவர்களும், விடயதானம் வழங்கியவர்களும்

- திரு.மா.இராசையா(ஓய்வு பெற்ற அதிபர்)
- திருமதி.சின்னத்தங்கம் கயிலாயப்பிள்ளை
- திருமதி வள்ளியம்மை மயில்வாகனம்
- திரு.கா.தம்பிராசா(J.P)
- திருமதி.செல்லத்தங்கம் வெற்றிவேல்
- திரு.வை.கந்தையா
- திரு.நா.நல்லதம்பி
- திரு.வீ.இளையதம்பி(ஓய்வுபெற்ற அதிபர் - J.P)
- திரு.சா.பஞ்சலிங்கம்
- திரு.சி.சுகுந்தன்(தலைவர்)
- திரு.ஆ.சிவநேசதுரை (பிரதேசசபை உறுப்பினர் - J.P)
- திருமதி.தேவி பஞ்சலிங்கம்
- க.புவனேந்திரன்
- நிலற்படங்கள் வழங்கியவர் திரு.க.ருத்திரன்(ஊடகவியலாளர்)

## ஆலயக் கட்டிடங்கள் அமைத்தவர்கள்

➢ **முன் மண்டபம், மடைப்பள்ளி**
திருமதி.செல்லம்மா கதிர்காமத்தம்பி
(பஞ்சலிங்கம் குடும்பத்தவரால் கட்டிக்கொடுக்கப்பட்டது)

➢ **அன்னதான மடம்**
அமர்ர்.S.யோகநாதன்(கொந்துராத்துக்காரர்)
அவர்களால் அத்திவாரமிடப்பட்டு, மறு வருடம் தொடரவில்லை)

திரு.மார்க்கன் - 50000/-
திரு.சா.பஞ்சலிங்கம் - 100000/-
திரு.நா.திரவியம்(ஜெயம்) - 50000/-
(ஆகியோரால் நிதி வழங்கப்பட்டு கட்டிமுடிக்கப்பட்டது)
இதன் மேசன் வேலையை திரு.நல்லதம்பி, சோதிராசா அவர்கள் இனாமாக செய்தார்கள்)

- சுற்றுமதில் மின்குமிழ்
  திரு.நா.திரவியம்(ஜெயம்)


- பிள்ளையார் கோவில்
  திரு.ச.வேலுப்பிள்ளை குடும்பம்

- நாகதம்பிரான் முன் மண்டபம்
  திருமதி.யோகம்மா சாமித்தம்பி குடும்பம்

- வதனமார் பந்தல்
  திரு.க.கதிர்காமநாதன் (அதிபர்)

- களுமரம்
  திரு.கா.சின்னத்தம்பி குடும்பம்.

## காவடிப் பாடல்கள்



காவடி ஆடுபவர்கள் தற்காலத்தில் சினிமா பாடல்கள் பாடியும், பைலாப் பாடல்கள் பாடியும் காவடி ஆடிச் செல்கின்றனர். எமது ஆலயங்கள் சிலவற்றில் இதனைக் காணக்கூடியதாயுள்ளது. முக்கியமாக கதிர்காமத்தில் இதே நிலைதான் உள்ளது. எனவே காவடி ஆடுபவர்களுக்காக காவடிப் பாடல்களையும் இந்நூலில் இணைத்துள்ளேன்.

## காவடிப் பாடல்கள்
### (கழுகுமலைப் பத்து)

1. கழுகுமலை தனிலுறையும் முருகவேளே
கருத்துடனே யுன்பாதமலர் தானே யோதப்
பழுதொன்றும் வாராமற் காக்க வேண்டும்
பச்சைமால் தன்மருகா பார்வதியின் மைந்தா
வழுவாமல் அடியேன் முன் நிற்க வேணும்
வரும் பிழைகள் தனையகற்றி வழியே செய்வாய்
தெளிவாக உன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே....!

2. காடுதனில் வேங்கை மரமாகி நின்றாய்
கானவர்கள் கண்டுன்னை கடுவேகத்தால்
சாடிடவே மனதிலெண்ணிப் பரிசை கத்தி
தானெடுத்தார் தவிடு பொடியாக்க வென்று
கூடிய குறவரெல்லாம் நிமித்தங்கண்டு
குமரவே ளென்று எண்ணிக் குலைந்திட்டார்கள்
தேடியே உன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே....!

3. கிட்டாத பொருள்தனைப் போலே எந்நாளும்
கிருபையுடனே இந்தப் புவியில் நானும்
எட்டியெட்டியே யுன்னைப் பார்க்கும்போது
ஏமாற்றி என்னை விட்டு ஏகலாமோ
சட்டமுடன் தோகைமயில் மீதிலேறிச்
சடாச்சரமாய் என்முன்னே தோற்றவேணும்
திட்டமுட னுன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே....!

4. கீர்த்தியுடனே யிந்தப் புவியில் நானும்
கிருபையுடன் பதியைத் தேடி வாறேன்
பூத்த மலர் போல் உன்னைக் காண்பதெப்போ
புண்ணியனே எனக்கு வரம் தருவதெப்போ
வார்த்தையொன்றும் உரையாயே வள்ளி வழ்வே
வந்துனது சந்நிதியில் மனதன்பாகத்
தீர்த்தங்களாடி யுன்னைத் துதிப்பேனையா - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே....!

5. குவலயத்தில் அடியேன் நான் செய்தபாவம்
குற்ற மெல்லாம் பொறுத்துனது குழந்தையைப் போல்
கவலையற்று வாழ்ந்திருக்கக் கருணை தந்து
காப்பதுன் செயலல்லோ காரத்திகேயா
சவலையிளங் கன்றுதன் தாயைத்தேடி
தயங்கிறது போலே யான் தயங்கலானேன்
சிவலை நிற மார்கழகா செந்தூர்க்கந்தா
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே....!

6. கூடியே மறலியென்னை பிடியாவண்ணம்
கொடு நரகிலே யானும் விழுந்திடாமல்
வாடியே மனம் மெலிந்து போகாவண்ணம்
மாகவே உன்னுடைய கீர்த்தி தந்து
பாடியே பவனொழி பவாய மென்றால்
பறக்குமே பசாசுமுதல் ஏவல் தானும்
தேடியே யுன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே....!

7. கெடுதியுள்ள சூரனை வதையே செய்தாய்
கிளிமொழியாள் வள்ளி தினைப் புனத்திலேதான்
படிமீதிற்றான் பெரிய பண்டாரம் போல்
பாசி பற்றியே பழுத்த கிழவனாகித்
தடியூண்டித் தண்டு கமண்டலமும் கொண்டு
சாஷ்டாங்கமாய்க் குறவர்க்கெதிரே சென்றாய்
தேடியே உன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே....!

8. கேசவனார் மருகோனே நீ செய்தகோலம்
கெடிதான குமரகுரு வேடனாகி
நேசமுடன் கையில் வில்லம்பு கொண்டு
நிமிசமுடன் வள்ளி தினைப்புனத்திலேதான்
பாசமுடன் பெண்ணே கண்ணே யென்று
பண்புடைய வள்ளியை நீ பாகம் செய்தாய்
தேசமெல்லாம் திரிந்தலைந்தேன் உன்பாதங்காண
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே....!

9. கையில் கோழிக்கொடியும் வேலும்
வள்ளிதெய் வானையுடன் மயில்மீதேறி
தையநல்லாள் தீபதூபன் பிடிக்கத்
தாதியர்கள் இருபுறமும் கவரிவீச
மெய்யுடனே ஆறுமுக ரூபமாகி
வேலவனே வந்தெனக்கு விடைகள் தாரும்
தெய்தெய் என்றுன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே....!

10. கொன்றை மலர்வேணியனே உனக்குத் தானே
குழந்தையாய் வந்துதித்த குமரவேளே
அண்டமெல்லாம் உனைக்காண வேண்டியிங்கே
அபயமென்று கையேந்தி அணுகி நிற்பார்
தண்டை கிண்கிணி காலிற் சதங்கை கொஞ்ச
தானோடி வந்துனது ஒளியைக் காட்டும்
தெண்டனிட்டேன் உன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே....!

11. கோதையர்களிரு புறமும் கவரிவீசக்
குளிரான மதிமுகங் களாறுந் துன்ன
காதலுடன் பன்னிருகை வேலுந்தன்ன
கான மயில் மீதேறும் கார்த்திகேயா
வாதுடனே சோதயஞ் செய் சிகரம் தன்னை
வடிவேலால் நீறு செய்த வானோர்கோவே
சீதைமருகோனே உன்புகழைச் சொன்னேனே - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே....!

12. கவ்விய பூதமென்னைப் பிடியா வண்ணம்
காத்துனது கிருபை தந்து ரட்சியுமையா
பவ்விய மெய்மறந்து மொரு பிசாசுதானும்
பவனொளி பவாயமென்றால் பறக்கும்தானே
ஒவ்வியே எனைச் சூழும் லாடன் மாடன்
ஓம் நமசிவாயமென்றால் ஓடிடாதோ
செவ்வையாய் யுன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே....!

13. இக்கணமே இதுநல்ல வேளையையா
இதோபாரும் சந்நிதியில் திருவிழாவை
வக்கணமாய் கற்பூர மடை விளக்கு
வகைவகையாய் கன்னியர்கள் ஏந்துகிறார்கள்
எக்காளம் பேரிகை தம்பூர் மேளம்
இடியெனவே எத்திசையும் முழங்கி நிற்க
சிக்கனமே உன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே....!

(காவடிப் பாடல்கள் முற்றிற்று)

## பரம்பரையாக ஆலயத்தை நிருவகித்து வந்த இரு கத்தறையின் 'வம்சாவழி' விபரம்


### கதிர்காமர் காசுபதி (சக்கையன் போடியார்) -(1865 - 1946)

- தங்கப்பிள்ளை
  - கதிர்காமத்ம்பி போடியார்
    - வள்ளியம்மை செல்லத்தங்கம்
      - மாரிமுத்து
      - கந்தசாமி
    - செல்லம்மா
      - பொன்னம்மா
      - அசோக்குமார்
      - லெட்சுமி
      - காசுபதி
      - பொன்னம்பலம்
      - மகேசன்
      - தேவி
- வாசாமனிசி
  - அன்னமுத்து (அன்னி)
- இராசம்மா
  - அன்னம்மா
  - தங்கப்பிள்ளை
  - பிள்ளையம்மா
  - சிவகாமி
- மாரிமுத்து
  - சின்னத்தம்பி
  - தம்பிராசா

### பேயர் (கந்தப்பன்)

- மாரி
  - வாசாமனிசி
    - சின்னத்தம்பி
    - சின்னப்பிள்ளை
    - வெள்ளக்குட்டி
    - நாகமுத்து
  - செல்லப்பா கண்ணகை
- முனைக்கணபதி
  - சின்னத்தங்கம்
  - வள்ளியம்மை
- அன்னமுத்து
  - நல்லதம்பி
  - கந்தசாமி

2014ல் கோவில் சடங்கின்போது எழுக்கப்பட்ட படங்கள்



(கோவிலின் முன்பக்கத் தோற்றம்)



(கன்னிமார் பிள்ளைகள்)



(கும்பம் கொண்டு போதல்)



(காத்தவராயன் பூசை)



(திரு.சி.சந்திரகாந்தன் அவர்கள் சாட்டையடித்தல்)



(தீர்த்தம் ஆட ஆயத்தமாகும் போது)



(தீர்த்தத் கரையை மக்கள் அடைதல்)



(அடியார்கள் தீர்த்தம் ஆடுதல்)

# நூலாசிரியரைப் பற்றி...!



மட்/வாழைச்சேனைக் கிராமத்தில் பிறந்தவரான தாழை செல்வநாயகம் என்னும் புனை பெயர் கொண்ட கந்தையா செல்வநாயகம் என்பவர் இலங்கை அரசினால் வழங்கப்படும் பல விருது -களைப் பெற்றவர். கலை இலக்கியத் துறைகளில் மாத்திரமின்றி ஆரம்ப காலம் முதல் பொதுச்சேவைகளிலும் ஈடுபட்ட ஒருவராகும். இவரால் பெயரிடப்பட்ட "ஊர்ப்பணி மன்றத்தின்" செயலாளராகவும் பேத்தாழை கிராம அபிவிருத்திச் சங்கத்தில் 10 வருட காலங்களுக்கு மேலாக தலைவராகவும், வாழைச்சேனை புதுக்குடியிருப்பு கண்ணகி அம்மன் ஆலயத்தில் பல வருட காலங்கலாக செயலாளராகவும், கடமையாற்றி பல பொதுச்சேவைகள் செய்ததுடன், தற்போது 14 வருட காலங்களாக கோறளைப்பற்று அரசசேவை ஓய்வூதியர் சங்கத்தின் தலைவராகவும், மட்டக்களப்பு மாவட்ட பொருளாளராகவும் 10 வருட காலங்களாக சேவையாற்றி வருகின்றார்.

அரச ஓய்வூதியர் சங்கத்தின் கொழும்பு தலைமைச் சங்கத்தால் நடாத்தப்பட்ட தெரிவின்போது கோறளைப்பற்று பிரதேச செயலாளர்பிரிவுச் சங்கமே முதல்தரமான சங்கமாகவும், 2014ல் நடைபெற்ற தெரிவின் போதும் கோறளைப்பற்று சங்கமே இலங்கையில் முதல்தரமான சங்கமாகவும் தெரிவுசெய்யப்பட்டு, பரிசாக 15000/- ரூபாவினையும், மாவட்ட சங்கத்திற்கு இதன் மூலம் பரிசாக 10000/- ரூபாவினையும் பெற்றுக்கொடுத்த பெருமை இவரையே சாரும்.

இவரது "நாகமரச்சோலை" நாவலும்
"கண்டிராசன் கதை" கூத்து நூலும்
அடுத்து வெளிவரவுள்ளன.